விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 வைகாசி 14 ஷபா 4 இதழ் 104

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28—5—82

இன்று ஆரம்பம்
G.C.E.A/L
தூய பிரயோக கணித
வகுப்புக்கள்
ஆசிரியர் ரவிமோகன்
மணியம்ஸ் பில்டிங்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(ஸ்ரீதர் சினிமா-நாகவிகாரைக்கு
இடையில் அமைந்துள்ளது)
3357

## 150 போலி கடவுச்சீட்டுகள் சென்னையில் சிக்கின!

சென்னை, மே 27

சென்னை நகரில் இந்தியப் பொலிசார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கைகளில் நூற்று ஐம்பதுக்கும் அதிகமான சட்டவிரோதமான கடவுச்சீட்டுகள் (பாஸ்போர்ட்) கைப்பற்றப்பட்டன என்றும் இக்கடவுச்சீட்டுக்களை இலங்கையைச் சேர்ந்த இளைஞர்கள் வைத்திருந்தனர் என்றும், சென்னைநகரப் பொலிசார் தெரிவித்துள்ளன.

(8ம் பக்கம் பார்க்க)

★ யாழ். பல்கலைக்கழக மாணவர்களின்

# பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டால் விமலராஜா விடுதலை! அரசு வட்டாரம் நம்பிக்கை

(கொழும்பு)

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள், பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாதபட்சத்தில், பருத்தித்துறை இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக் கழக மாணவன் அ. விமலராஜா அடுத்த சில தினங்களில் விடுதலை செய்யப்படலாம் என்று அரசு வட்டாரங்கள் நேற்று நம்பிக்கை தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழக மாணவன் அ. விமலராஜா நானூறுக்கும் அதிகமான நாட்களாக விசாரணை எதுவுமின்றி இராணுவமுகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாதபட்சத்தில் முதலில் மாணவன் விமலராஜாவையும், அதனைத்தொடர்ந்து ஏனைய ஐம்பது வடபகுதி தமிழ் இளைஞர்களையும் விடுதலைசெய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்றும் மேற்படி வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

## ரோட்டரிபயிற்சிமுகாம் இன்று வளலாயில் ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, பரந்தன், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள ரோட்டரிக்கழகங்களின் அனுசரணையுடன் வளலாய் பிஷப் இல்லத்தில் பயிற்சி முகாமொன்று இன்று ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் ரோட்டரி கழகத்தினர் இதில் பங்குபற்றுவர்.

இளைஞர்கள் சமூகத்தில் தலைமைதாங்கும் ஆற்றலுக்கு பயிற்சி அளிப்பதே இம்மூன்று நாள் பயிற்சிமுகாமின் நோக்கமாகும்.

இலங்கையில் இனங்களுக்கிடையில் பரஸ்பரம் நல்லுறவையும் தேசிய ஒருமைப்

[8-ம் பக்கம் பார்க்க]

## "நள்ளிரவு நேரத்தில் ஏழுபேர் கோஷ்டி வந்தது"

(யாழ்ப்பாணம்)

'அளவெட்டி வடக்கிலுள்ள எமது வீட்டில் நேற்றுமுன் தினம் நள்ளிரவு இனம் தெரியாத 7பேர் கொண்டகோஷ்டி வந்தது சுழல் துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி வீட்டுக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் எனது சகோதரரான உமாகுமாரனை ஏற்றிக்கொண்டு ஒரு புறப்பட்டார். மற்றைய ஆறு இளைஞர்களும் அங்கு நின்ற மற்றைய மோட்டார் சைக்கிளின் டயர்களில் இருந்த காற்றை திறந்து விட்டதுடன், எங்களையும் பயமுறுத்திவிட்டு சைக்கிளில் சென்றனர்'' என்று உமாகுமாரனின் சகோதரன் சிவகுமாரன் பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

உமாகுமரனை மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்ற அக்கோஷ்டியினர் அளவெட்டி தெற்கில் மற்

(8-ம் பக்கம் பார்க்க)

# இறைகுமாரன், உமாகுமாரன் துப்பாக்கிச் சூட்டில் பலி!

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு பெருமாக்கடவைப் பிள்ளையார்கோவிலுக்கு முன்பாகவுள்ள வயலில், துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இருஇளைஞர்களின் சடலங்கள் நேற்றுக் காலை கண்டு பிடிக்கப்பட்டன.

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த பரநிருபசிங்கம் இறைகுமாரன் (28 வயது) என்பவரும், அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சிவபாலசிங்கம் உமாகுமாரன் (வயது 29) என்பவருமே துப்பாக்கியால் சுடப்பட்டு அண்ணார்ந்த நிலையில் அருகருகே இறந்துகிடக்கக் காணப்பட்டனர்.

இறந்த இறைகுமாரன் விவசாய உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார். இவர் தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணியின் அமைப்புச் செயலாளராக இருந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணி, யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றதிலிருந்து தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து பிரிந்து தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணியின் அமைப்புச் செயலாளராக இவர் இருந்து வந்ததாகவும், 1976ல் கூட்டணிக்குச் சாதகமாக 'இளைஞர் குரல்' என்ற பத்திரிகையை ஒருவருடமாக நடத்தி வந்தாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

மற்றைய இளைஞரான உமாகுமாரன் விசுவமடுவில், பாற்பண்ணை ஒன்று நடாத்தி வருபவரென்று தெரிவிக்கப்படுகிறது.

(மா

## இலங்கை ஐ. ஜி. பி. சென்னையில் விசாரணை

சென்னை, மே 27

புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள இலங்கை பொலிஸ்மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் இன்று அல்லது நாளை சென்னை வந்துசேருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுடில்லியிலிருந்து கிடைக்கப்பெற்ற ஊர்ஜிதமற்ற தகவல்களின்படி, இலங்கை பொலிஸ் மா அதிபர் சென்னையில் விசாரணை மேற்கொள்ளலாம் எனத் தெரியவருகிறது.

இலங்கையில் தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்த பிரபாகரன், உமாமகேஸ்வரன் மற்றும் சிலர் சென்னையில் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக உயர்மட்டத்தில் இலங்கைப் பொலிஸ் மா அதிபர்விசாரணை நடத்துவார் என்றும் இதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கியிருப்பதாவும் மேற்படி தகவல்கள் தெரிவித்தன.

## பகிஷ்கரிப்புக் குறித்து இ.அ.தொ.உ.சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் தொலைத் தொடர்பு ஊழியர்களின் உத்தேச பகிஷ்கரிப்பு குறித்து இலங்கை அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சி. தங்கவேலாயுதசாமி பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்:

'அஞ்சல் தொலை தொடர்பு திணைக்களத்தின் இரு தொழிற் சங்கங்கள் சம்பளம், மேலதிக நேரக்கூலி போன்ற கோரிக்கைகளை முன் வைத்து இம்மாதம் 29ம் திகதி சனிக்கிழமை தமது கடமைகளை பகிஷ்கரிப்பதென்று தீர்மானித்துள்ளது.

'இலங்கை அஞ்சல் தொலை தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் திரு. இ. செல்லத்துரையும் நானும் அஞ்சல் அதிபர் நாயகத்தைச் சந்தித்து நடாத்திய பேச்சுவார்த்

(8ம் பக்கம் பார்க்க)

## வயல்வரம்பில் மோட்டார் சைக்கிள்; சடலங்களுக்கு அருகில் தோட்டாக்கள்

[யாழ்ப்பாணம்]

பெருமாக்கடவைப் பிள்ளையார்கோவில் முன்பாகவுள்ள வயல்வெளியில் இறந்த நிலையில் காணப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களையும் சுன்னாகம் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரனும், யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் திரு எஸ். நவரத்தினராசாவும் நேற்றுக் காலை சென்று பார்வையிட்டனர்.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்று மேற்படி ஆலய முன்றலில், வயல்வரம்புடன் சரிந்தநிலையில்காணப்பட்டது.

இறந்து கிடந்த இரு இளைஞர்களின் சடலங்களும் அருகருகே நிமிர்ந்த நிலையில் காணப்பட்டன.

இருவரின் சடலங்களுக்கும் அருகில் வெற்றுத் துப்பாக்கி ரவைகளும் ஒரு பாவிக்கப்படாத துப்பாக்கி ரவையும் காணப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் சடலங்கள் கிடந்த இடத்தைப் பார்வையிட்டு, பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்,

இரு இளைஞர்களின் சடலங்களும் நேற்றுப் பிற்பகல் யாழ். பெரியாஸ்பத்திரி பிரேதஅறையில், பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று பிரேத பரிசோதனை நடைபெறும்.

(மா

## திருக்கேதீஸ்வரம் ரதோற்சவம் ஜூன் 3-ல்

(திருக்கேதீஸ்வரம்)

திருக்கேதீஸ்வர ஆலய ரதோற்சவம் அடுத்த மாதம் 3-ம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறுகிறது.

(8-ம் பக்கம்பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

நல்லநிலையிலுள்ள, சவுக்காரத்தொழிற்சாலைக்கு ரிய இயந்திர உபகரணங்கள் தேவை. தொடர்பு: மல்ரி சேவிசஸ், த டன்லப் ஸ்ரோாஸ், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3321

இணுவிலில் அமைந்திருக்கும் நவீன வசதிகள்கொண்ட ''காமென்ட்ஸ்'' தொழிற்சாலைக்கு பல அனுபவமுள்ள பெண்கள் தேவை. முன்னர் காமென்ட்ஸ் தொழிற்சாலைகளில் வேலை செய்தவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் வரவும். சாந்தா காமென்ட்ஸ் இராஸ்ஹொட், கே கே. எஸ். வீதி. மருதனுமடம் சந்தி அருகில், இணுவில். 3290

ஆங்கில அறிவுள்ள பெண் லிகிதர்கள் தேவை. சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும், யாழ் நகர எல்லைக்குள் வசிப்பவர்களாக இருத்தல் அவசியம். விளம்பர இல: 3346 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3346

மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ள கார்சாரதிதேவை. லைசென்ஸ், நற்சாட்சிப் பத்திரங்களுடன் உடனே நேரில் வரவும். அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 3349

சிறு கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கும் திருநெல்வேலி விளைதப் பொருட்கள் உற்பத்தி நிலையத்திற்குப் பெண் பயிற்சியாளர் தேவை. 12-6-82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளைதப் பொருள் உற்பத்தி நிலையம், அம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 3339

## விற்பனைக்கு

கலர் ரி. வி. நஷனல் பனசொனிக் - 27'' (Electronic Remote Control) வீடியோ நஷனல் பனசொனிக் NV-7200 213, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் 32 5

திருநெல்வேலி கிழக்கு இராசபாதை வீதியின் இருபுறமுமாக 3 துண்டுகள் 2 1/2, 4, 4 பரப்பு வீதம் உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். N. ஜெயரத்தினம், வாசிகசாலையின் அருகாமையில், கல்வியன்காடு, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம்: 8302. (3325

## விற்பனைக்கு

நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், த டன்லப் ஸ்ரோார்ஸ், 234, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3337

வடலியடைப்பில் உள்ள அரசடி வீதியின் உட்பகுதியில் 10 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு M. சின்னத்துரை, சார்ளியா குறுப், பதுளை. 3351

## பயிற்சி

ஒரு மாத எலக்றிக்கல் வயறிங் டிப்பிளோமா பயிற்சி, ஒரு மாத வெல்டிங் டிப்பிளோமா பயிற்சி 02-06-82 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னெலொஜி, 9 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3344

வெல்டிங் மோட்டார் மெக்கானிசம் வயறிங் [செய்முறை அறிமுறையுடன் புதிய வகுப்புகள் ஆரம்பம் 29-05-82 J. E. C. 33 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், புகையிரதக்கடவைக்கு அருகில்.

## WANTED

Wanted an experienced Accounts Clerk Typist with at least five years experience, Arasco Industries 163, Kandy Road, Jaffna. 3348

## பிறந்த நாள் வாழ்த்து



மட்டுவில் வடக்கு வேலுப்பிள்ளை பாலன் செல்லம்மா தம்பதிகளின் புதல்வன் சதீஷ் இன்று தமது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். 3354

# ஏலவிற்பனை

## மீன்பிடி வள்ளமும் வலைகளும்

1982-ம் ஆண்டு ஆனித்திங்கள் 12-ம் நாள் சனிக்கிழமை காலை 10 மணியளவில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை பருத்தித்துறை மீன்பிடிக் கூட்டுறவுச் சங்க வளவில்வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. வள்ளம்; இல. CNJJ/BLPB/124; 17½ அடி இழைக்கண்ணாடி சீநோர்
2. எந்திரம்: இல 2362 எவன்றுட்—6 H. P. மண்ணெண்ணெயில் இயங்குவது
3. வலைகள்: 27 PLY × 7''—2
   21 PLY × 7''—2
   27 PLY × 6''—
   21 PLY × 5''—1

இவை தனித்தனியாகவோ, ஒன்றாகவோ ஏலமிடுவதற்குச் சூழ்நிலைக்கேற்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இவற்றைப் பார்வையிட விரும்புவோர் முன் அறிவித்தலுடன் மக்கள் வங்கியின் பருத்தித்துறை முகாமையாளரைச் சந்தித்து ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம்.

முகாமையாளர்

3310

# 170 மணிநேரம் 'டுவிஸ்ட்' நடன சாதனை

[யாழ்ப்பாணம்]

நல்லூரைச் சேர்ந்த க உதயகுமார் என்ற 25வயது இளைஞர் 170 மணி நேரம் தொடர்ச்சியாக ''டுவிஸ்ட்'' நடனம் ஆடி. சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

கட்டப்பராய் முழுமதி சனசமூகநிலையத்தின் ஆதரவுடன் கட்டப்பராய் மைதானத்தில் இந்நடனம் இடம்பெற்றது. கடந்த 9ம் திகதி இரவு 8-15 பணிக்கு டுவிஸ்ட் நடனத்தை ஆரம்பித்தஉதயகுமார் நேற்று முன்தினமிரவு 10-15 மணிக்கு மேடையைவிட்டு இறங்கினர்.

சட்டத்தரணி எனக. கேசவன் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்,

கல்வியங்காடு டாக்டர் எஸ். ஏ. எம். சக்திவேல் இளைஞர் உதயகுமாரின் நலன்களைக் கவனித்தார். முழுமதி சனசமூக நிலையத் தலைவர் திரு ஆறுமுகம் செல்வநாயகம் உதயகுமாருக்கு மாலை அணிவித்து சாதனைச் சான்றிதழை வழங்கினார். [அ[

## கொக்குவில் கிருபாகரர்உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. பத்துத்தினங்களுக்கு நடைபெறவிருக்கும் உற்சவங்களில் எதிர்வரும் 5ம் திகதி காலை தேர்த் திருவிழாவும், 6ம் திகதி மாலை தீர்த்தோற்சவமும், 7ம் திகதி இரவு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவிருக்கின்றன. (கி)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்

உடுவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகேசு என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்
மரணமெய்தியவர்
சின்னத்தம்பி முருகேசு கைம்பெண் ஜெயலக்குமி உடுவில் கிழக்கு, உடுவில்
மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம் இல. 131
எதிராக

1. முருகேசு திருஞான சம்பந்தர் - பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
2. முருகேசு மகள் புனிதச்செல்வி யோகீஸ்வரி-உடுவில் கிழக்கு, உடுவில்.
3. முருகேசு வாகீசர்-உடுவில்கிழக்கு, உடுவில்.

எதிர் மனுதார்கள்

மேற்படி இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க அதில் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 9ம் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்

1982ம் ஆண்டு சித்திரை மாதம் 8ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் எழுதப்பட்டது.
இ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
3326

## மல்வம் அம்பாளுக்கு திருமஞ்சனக் கிணறு

(யாழ்ப்பாணம்)

உடுவில் மல்வம் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்குத் திருமஞ்சனக்கிணறு அமைப்பதுபற்றி இன்றிரவு திரு.க. மாணிக்கவாசகர் தலைமையில் அம்பாள் இந்துமகா சபையின் செயற்குழு கூடுகின்றது.

## பொன்னாலை வரதராஜப்பெருமாள் தேர்த்திருப்பணி நிதி

இத்திருப்பணியை வசதிபடைத்தவர்கள் மூலம் தேரின் அங்கங்களை உபயமாகச் செய்வித்தும் பொருள் சேகரித்தும் பணியை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் அன்பர்கள் அனைவரும் உதவுக.

3320 மேற்படி திருப்பணிச் சபையினர்.

## CLASS

Accounts Costing, (I. C. M. A. and all other proffessional exams)
Commencing on 20th June, For details contact;

Mr. Balasubramaniam
56, Arasady Road,
Vannarponnai, Jaffna
before 15th June, between 6 P. M. and 8 P. M. (3344)

## முக்கிய அறிவித்தல்

### அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகா தேவி நகுலேஸ்வர ஆலயம்

சிவநேயச்செல்வர்களே!

மேற்படி ஆலய இராஜகோபுர திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சில ஏமாற்றுப் பேர்வழிகள் பணம் சேகரிப்பதாக அறியவருகிறது. ஆனபடியால் பொதுமக்கள் மேற்படி ஆலயத்திற்காக பணம் சேகரித்தவரையோ அல்லது சேகரிக்கவருபவரையோ உடனடியாக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இராஜகோபுர திருப்பணிக்கு பணம் கொடுக்கவிரும்பும் அடியார்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:

கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தா
நகுலேஸ்வர ஆலயம்
3340 கீரிமலை, காங்கேசன்துறை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

1. சின்னத்தம்பி தம்பிஐயாவும் பெண்
2. அன்னமுத்துவும்
3. தம்பிஐயா மகள் அரியமலரும்

— வழக்காளிகள்

வழ. இல. ஈடு/1246
எதிராக

1. நாகலிங்கமும் வைத்திலிங்கமும் பெண்
2. நவமணிதேவியும் குமரகோட்டம் கோண்டாவில் மேற்கு.

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் MB/1246ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1982ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி (31-05-82) முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 9000/-ம் 8-10-1979 தொடக்கம் 5-06-1980 வரைக்கும் ரூபா 4500/-க்கு 18 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 632-50. இச்செலவு கொடுபட்டது.

### ஆதனவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று கோண்டாவில்இறை 'அழகாத்தைதோம்பு'' பெரியபுலம் நில. பர 3 பயிர்வகைகளும் இப்போது புதிதாகக் கட்டப்படும் கல்வீடும் தெற்கெல்லைக் கிணற்றில் பங்கும் தூர்வையும் இந்தப் பரப்பு மூன்றுக்கும் எல்லை கிழக்கும் மேற்கும் ஒழுங்கை. வடக்கு சின்னப்பு பொன்னையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு சீனியர் சின்னத்தம்பியின் ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியுமதைச் சேர்ந்தவைகளும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்றவிற்பனை ஆணையாளரும் மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை.
3347

--- போக்லண்ட் யுத்தம் ---

# பிரிட்டனுக்கு நியூஸிலாந்து போர்க் கப்பல்களை உதவும்

## தென் அத்திலாந்திக்கில் சோவியத் யுத்தக்கப்பல்கள்?

லண்டன் மே 27

போக்லண்ட் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பிரிட்டிஷ் துருப்புக்கள் போக்லண்ட் தீவிலுள்ள சென் காலொஸ் பகுதியைச்சுற்றி 65 சதுரமைல் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதாக பிரிட்டன் பாதுகாப்பமைச்சு வட்டாரங்கள் அறிவித்தன.

சென் காலோஸ் பகுதியில் நிலை கொண்டிருக்கும் பிரிட்டிஷ் துருப்புக்கள் அங்கே விமானத்தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக குழிகளை நிலத்தில் தோண்டி வைத்திருப்பதாகவும் போக்லண்டிலுள்ள பிரிட்டிஷ் வம்சாவளியினர் அவர்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றனரென்றும் தெரிவிக்கப்பட்டது.

### நியூஸிலாந்து பிரிட்டனுக்கு உதவும்

தென் அத்திலாந்திக் சமுத்திரத்தில் நிலை கொண்டுள்ள பிரிட்டிஷ் கடற்படையினருக்கு உதவியாக நியூலாந்தும் தனது போர்க்கப்பல்களைக் கொடுத்துதவ இருப்பதாக அறிவித்துள்ளது.

போக்லண்ட் நெருக்கடி மோசமடைந்திருக்கும் இவ்வேளை மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து போர் நீடிக்காது நடவடிக்கைகளை எடுக்கும்படி ஐ. நா. பாதுகாப்புச்சபை ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. பெரஸ்டி கியூலரைக் கேட்டுள்ளது.

### ஆர்ஜென்டீனு அதிர்ச்சி

அமெரிக்கா, பிரிட்டனை ஆதரித்து அதற்கு தனது ஆயுதங்களையும், விமானங்களையும் விநியோகிக்க முன்வந்திருப்பதையிட்டு ஆர்ஜென்டீனு அதிர்ச்சியும், கவலையும் அடைந்துள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை சோவியத் யூனியனின் போர்க்கப்பல்கள் சில தென் அத்திலாந்திக் பிராந்தியத்தில் காணப்பட்டதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவித்தன. (கி)



யாழ். பொதுசன நூல்நிலைய நம்பிக்கை நிதிக்கு ஹற்றன் நாஷனல் வங்கியின் சார்பில் யாழ். கிளை முகாமையாளர் திரு. மு. நவரத்தினராஜா 50,000க்கான காசோலையை யாழ். மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதனிடம் கையளிப்பதை இங்கு காணலாம். அருகில் வங்கியின் சட்ட ஆலோசகரும், வ. பி. போ. சபையின் தகுதிவாய்ந்த அதிகாரியுமான திரு. எஸ். கனகரத்தினம், மாநகர ஆணையாளர் திரு. சிஸ். சிவஞானம், உதவி முதல்வர் திரு. எஸ். அலோசியஸ், மாநகர உறுப்பினர் ஜனுப் இமாம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# பாப்பரசர் இன்று லண்டன் செல்கிருர்

## ஆர்ஜென்டீனுவுக்கும் செல்வார்

ரோம் மே 27

பரிசுத்த பாப்பரசர் ஜோன் போல் பிரிட்டனுக்குத் தமது முதலாவது விஜயத்தை நாளை வெள்ளிக்கிழமை மேற்கொள்கின்ருர். நான்கு நூற்ருண்டுகளுக்குப் பின்னர் கத்தோலிக்க பாப்பரசர் ஒருவர் மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

போரில் ஈடுபட்டிருக்கும் நாடொன்றுக்குப் பாப்பரசர் விஜயம் செய்யமாட்டாரென்பதே பலரது கருத்தாக இருந்தபோதிலும் இவ்விஜயம் புரொட்டஸ்தாந்து நாடான பிரிட்டனுக்கும், கத்தோலிக்க நாடான ஆர்ஜென்டீனுவுக்குமிடையே மூண்டுள்ள போரை கத்தோலிக்க மதத்தலைவர் என்ற முறையில் தீர்த்து வைக்கும் பொருட்டே பாப்பரசர் இவ்விஜயத்தை மேற்கொள்வதாக வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரிட்டனுக்கு இன்று செல்லும் பரிசுத்த பாப்பரசர் அங்கு தமது விஜயத்தை முடித்துக்கொண்ட பின்னர் ஆர்ஜென்டீனுவுக்குச் செல்லவிருக்கின்ருர்.

பிரிட்டனில் பரிசுத்த பாப்பரசரை வரவேற்பதற்கு பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அங்குள்ள கத்தோலிக்க அதிமேற்றிராணியார் தெரிவித்தார். (கி-இ)

## எண்ணெயில் தன்னிறைவு

புதுடில்லி மே, 27

7 ஆண்டுகளில் எண்ணெயில் பாரதம் தன்னிறைவு காணும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 1988ல் பாரதத்தில் போதுமான பெற்ருேல் கிடைத்து விடும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது, (க)

# கலைஞர் கருணுநிதிக்கு 60 தங்கப்பவுண் சங்கிலி

சென்னை மே. 27

திராவிட முன்னேற்ற கழக தலைவர் கலைஞர் மு. கருணுநிதிக்கு குளித்தலையில் 60 தங்கப்பவுண் சங்கிலி அணிவிக்கப்பட்டதுடன் பொன்னடையும் போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

1957ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் திரு. கருணுநிதி குளித்தலையில் போட்டியிட்டு வெற்றிபெற்ருர்.

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு தம்மை தொடர்ந்து தெரிவு செய்துவரும் தமிழ்நாடு மக்களுக்கு திரு. கருணுநிதி நன்றி தெரிவித்தார்.

தி. மு க. பொதுச் செயலாளர் திரு. க. அன்பழகன், திரு. வீரமணி, திருமதி மகரதம், சந்திரசேகர் ஆகியோரும் இவ்விழாவில் உரை நிகழ்த்தினர். (க)

## 24 பேர் கைது

ராவல்பிண்டி, மே 27

பாகிஸ்தானில் அரசியல் சட்டத் தடையை மீறியதாக 24 எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (க

ரூ. 20 லட்சம் கடத்தல் குற்றச்சாட்டு:

# முன்னுள் எம். பி., வர்த்தகர் பிணையில் அனுமதி

[கொழும்பு]

முன்னுள் ஹேவாஹெட்ட எம். பி. திரு. அனுரா டானியலும், கொழும்பு வர்த்தகர் திரு. மகிந்தசிறி உடுமாலஹேயும் 0 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை கடத்தி வந்த குற்றச்சாட்டின் பேரில் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் தலா 10,000 ரூபா பிணையில் செல்லுமாறு நீதிபதி பணித்து மேல்விசாரணையை அடுத்த மாதம் 24ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இவர்கள் இருவருக்கும் இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை சுங்ககலெக்டர் திரு. எச். பி. தசநாயக்க தலா 20 லட்சம் ரூபா அபராதம் விதித்திருந்தது தெரிந்ததே. [வெ]

## பதவி ஏற்றனர்

புதுடில்லி, மே. 27

மேற்கு வங்காளத்தில், இடதுசாரி முன்னணியைச்சேர்ந்த திரு ஜோதிபாசு தலைமையில் பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டன.

## இலவசஉணவு திட்டம்

சென்னை மே. 27

தமிழ் நாட்டில் இலவச உணவு வழங்குவதற்கு 6 லட்சரூபா ஒதுக்கப்பட்டுள்ளது, 2 வயதிற்கும் 10 வயதிற்கு மிடையிலான பிள்ளைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் இலவச உணவு வழங்கப்படும். (க)

உருத்திரபுரம்

## பற்றிமாதா உற்சவம்

(கரவெட்டி)

உருத்திரபுரம் புனித பற்றிமாதா ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் ?0-ம் திகதி காலை நடைபெறும் கூட்டுப் பலிபூசையுடன் நிறைவுபெறுகின்றது.

விழாவைப் பங்குத் தந்தை மொன்போட் அடிகள் நிறைவேற்றிவைப்பார். (அ)

## ஆர்ஜென்டீனு படைகள் வெளியேறினுலே யுத்த நிறுத்தம்

லண்டன், மே. 27

போக்லண்ட் தீவுகளை விட்டு ஆர்ஜென்டீனு படைகள் வெளியேறினுல் மட்டுமே பிரிட்டன் யுத்த நிறுத்தம் செய்யும் என பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் அறிவித்துள்ளார். [க]

யாழ். ஆஸ்பத்திரி

# ஈ.என்.ரி. சிகிச்சைப் பிரிவு நிரந்தரமாக இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பெரியாஸ்பத்திரியில் காது, மூக்கு, தொண்டை (ஈ. என். ரி) சிகிச்சைப்பிரிவு நிரந்தரமாக இயங்கத் தொடங்கியுள்ளது.

இப் பிரிவுக்குப் பொறுப்பாக ஈ. என். ரி. டாக்டர் ஜெயராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இச் சிகிச்சைப்பிரிவு மூடப்பட்டதும், பின்பு தற்காலிகமாக இயங்கத்தொடங்கியதும் தெரிந்ததே. (கு-அ)

# நிரந்தர சட்டவைத்திய அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு நிரந்தர சட்டவைத்திய அதிகாரியாக டாக்டர் எஸ். சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை சட்டவைத்திய அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் என். சரவணபவான் சட்டவைத்திய பிரிவு விரிவுரையாளராக யாழ் மருத்துவ பீடத்திற்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

முன்னரும் யாழ் பெரியாஸ்பத்திரியில் சட்டவைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் சுப்பிரமணியம் கொழும்பு பெரியாஸ்பத்திரி சட்டவைத்திய அதிகாரியாக இடமாற்றம்பெற்றுச் சென்று மீண்டும் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு வந்துள்ளார் என்பது தெரிந்ததே. (கு-அ)

# உண்ணுவிரதத்தில் பரந்தன் வேலை நிறுத்த ஊழியர்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணுவிரதத்தில் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களும் யாழ். பலநோக்கக்கூட்டுறவு ஊழியர்சங்கத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர். கூட்டுறவு ஊழியர்களில் பெண்களும் அடங்கியிருந்தனர்.

யாழ். பல்தொழில் நுட்ப மாணவர்களின் தற்காலிக மாணவர் அவையின் தலைவர் ரி. யோகானந்தன் தலைமையில் மாணவர்கள் ஊர்வலமாக யாழ் பல்கலைக்கழகத்துக்குச் சென்று உண்ணுவிரதமிருந்த மாணவர்களுடன் கலந்து கொண்டனர். (மா)

பருத்தித்துறையில்

## இலவச கண்பார்வை பரிசோதனை

(புலோலி)

பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தினரால் நடாத்தப்படும் இலவச கண்பார்வை பரிசோதனை முகாமொன்று அடுத்தமாதம் 5-ம் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கண்ணுடி பாவிக்கவேண்டியவர்களுக்குக்குறைந்த விலையில் கண்ணுடிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ள தாகவும் கண்பார்வை பரிசோதனையை மேற்கொள்ள விரும்புபவர்கள் பருத்தித்துறை லயன்ஸ் கழக உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அதன் தலைவர் திரு. எஸ். சிவராசசிங்கம் அறிவித்துள்ளார். [அ]

## ஏழாலையில் இன்று பாரதி விழாக் கருத்தரங்கு

(ஏழாலை)

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலம் நடாத்தும் பாரதி நூற்ருண்டுக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் திருவாளர்கள் கோவை மகேசன். சங்கர. வைத்தியலிங்கம், காவலூர் எஸ். ஜெகநாதன், மாவை சேஞதிராசா முதலியோர் கருத்துரை வழங்குவர்.

''பாரதியின் நோக்கு நேறும் இன்றும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறும். [அ]

**மணிவாக்கு**

எண்ணியதை எண்ணியாங்கு எய்துகிற திறமை தூய மனதுக்கு வருகிறது.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## பெரிய மடையன்

கடுகணாவை பொலிஸ் வட்டாரத்தில் நிகழ்ந்த ஒரு பெண்ணின் தற்கொலை, அதனை விசாரணை செய்த கேகாலை திடீர் மரண விசாரணை அதிகாரியை விவாகமான கணவர்களுக்கு ஒருஎச்சரிக்கை விடுக்கத் தூண்டியுள்ளது.

ஐந்து பிள்ளைகளுக்குத் தாயான 38 வயதுடைய பெண் நஞ்சு குடித்து இறந்த பரிதாபசம்பவத்தை நேற்றைய ஆங்கில தினசரி ஒன்று குறிப்பிட்டிருந்தது. சமுதாய நலனைப் பாதிக்கும் சம்பவம் இது.

கணவன் இன்னொரு பெண்ணுடன் தொடர்புடையதை அறிந்த மனைவி ஆத்திரங்கொண்டு அவரை அவ்விடம்தேடிப் போனதும் அவரைக் காணமுடியாத நிலையில் வழியில் அப்பெண் நஞ்சு குடித்த நிலையில் காணப்பட்டதும் ஈற்றில் கேகாலை ஆஸ்பத்திரியில் இறந்ததும் இப்பரிசோதனையில் வெளிவந்தது. இது சாதாரண தற்கொலையா? சிந்தனைக்குரியது.

இன்றைய நாகரிக வாழ்வில்இதுஒரு ஆழமானவிடயமென்பது மரண விசாரணை அதிகாரிக்குப் புலப்படாமலிருக்கலாம். ஆனால் மனிதாபிமான ரீதியிலும், சமூக அடிப்படையிலும் அவர் கணவர்களுக்கு விடுத்த எச்சரிக்கை மிகப் பொருத்தமானது.

25 வருட இல்லற வாழ்க்கையில் இத்தகைய துன்ப நிகழ்ச்சி. குடும்பத்தலைவி பறிபோனதோடு பிள்ளைகளின் வருங்காலத்தை உள்ளூர் உறவினர் நெருங்கிய சமுதாயமனைத்தையும் பாழாக்கி வருகின்றது.

இல்லறத்தின் நல்லறத்தை விளக்க முனைந்த தமிழ் முனிவர்,

''அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்'' என்று அடித்துக் கூறியிருப்பதை இக்கால குடும்பஸ்தர்கள் நன்குணர்வது அவசியம்.

இக்காலம் என்று நாம் சிறப்பாகச் சுட்டுகிறது; ஒழுக்கம், கட்டுப்பாடு தளர்ந்த சமுதாய வாழ்வில் 'நாகரிக' மக்கள் இன்பம் காண்பதால் இந்த எச்சரிக்கை, மரணவிசாரணை அதிகாரியின் எச்சரிக்கையிலும்பார்க்க முக்கியமானது.

ஒழுக்கம் தவறி நடப்பவர்கள் பலவிதமான பாவங்கள், குற்றங்கள் புரிகின்றனர். இப்படி நெறிதவறிச் செல்பவர் எல்லாரிலும், தன் மனைவியைவிட்டு பிறரிடம் செல்லும் குற்றத்தில் சிக்கி அலையும் மனிதன் பெரிய மடையன் என்கிறார் முனிவர். இத்தகைய முயற்சியில் பயமும், பழியும், தண்டனையும் தன் விளைவு. குறிப்பிட்ட சம்பவத்தில் நிகழ்ந்த தண்டனை எத்தகையது? இதனால் விளையும் அவமானம் வேறெதனிலும் பார்க்க அதிகமானது.

ஒழுக்கநெறி மனிதனை மட்டுமா கட்டுப்படுத்துவது என்ற தர்க்கம் வெறும் குதர்க்கமே! ஆணுக்கு விதிக்கப்பட்ட அறநெறி பெண்ணுக்குமாங்கே பொருந்தும்; இன்றைய நவநாகரிக வாழ்வில், பெண்களும் ஆண்களும் நெருங்கிப் பழகுவதால், இவ்வித எச்சரிக்கை இரு சாராருக்கும் மிகமிக அவசியமானது; அதனைப் பேணி நடப்பதானால் நாகரிக வாழ்வு பண்பட்ட வாழ்வாக அமையும்.

ஆண்மைக்குள் பேராண்மை எது? முனிவரின் விடையைக் கருத்திற்கொள்வோம். பிறருக்கு உரிமைப்பட்ட பெண்கள் மேல் உள்ளம் செல்லாமல் பாதுகாத்துக் கொள்ளும் ஆண்மையே பேராண்மை. போரில் வெற்றிகாணவல்ல ஆண்மையிலும் பெரிது.

அதெல்லாம் அந்தக் காலம் என்று ஏளனஞ் செய்து மிகப் பழமையான தொழிலைக் குறிப்பிட்டு அதனை நாடு தவிர்க்கமுடியாததென்று வாதாடுபவர் சமுதாய நோய்களைப்பரப்புவதோடு சமூகத்தின் நிரந்தர எதிரிகளாவர்.

## உடனடி யுத்த நிறுத்தம்?

இன்று பிரிட்டிஷ் மண்ணில் காலெடுத்து வைக்கும் முதலாவது பாப்பரசர் உலக வரலாற்றிலேயே ஒரு பெரிய நிகழ்ச்சியை இயற்றுகின்றார்.

ரோமன் கத்தோலிக்க ஆட்சியை எதிர்த்து பாப்பரசரின் ஆதிக்கத்தை நிராகரித்த பிரிட்டன் பல நூற்றாண்டுகளாக புறட்டெஸ்டான்ட் கிறித்துவக் கொள்கையையே அரசாங்க மதமாக ஏற்றுவருகிறது.

பிரிட்டிஷ் முடிக்குரிய மன்னன் கத்தோலிக்க மதத்தவராகவோ, கத்தோலிக்க பெண்ணை திருமணம் செய்தவராகவோ இருக்கப்படாது என்ற ஒரு நிபந்தனையே இன்றும் அமுலிலிருப்பதனால் இவ்விரு பிரிவினர்களுக்கிடையே இருந்து வந்த பூசல்களை இது புலப்படுத்துகிறது.

காலத்தின் வேகமாற்றத்தால் இன்றையநிலை இவ்வித வேறுபாடுகளுக்கு தாபமிடுவதாயில்லை; அத்துடன் இன்று ஆட்சி புரியும் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், தமக்கெதிரான இரண்டு கொலைமுயற்சிகளை முறியடித்தவீரன்: மக்களை நேரில் சந்தித்து அவர்களின் வாழ்வை வளம்படுத்தும் செயல் முறைப்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்.

போலந்தில் அமைதியை உருப்படுத்த முயன்றும் வெற்றி காணாதவர் இன்று போக்லாந்தில் நடைபெறும் உக்கிர போரை எவ்வகையிலும் நிறுத்த வேண்டுமென்று அவதிப்படுகிறார்.

பிரிட்டனுக்கு மட்டுமல்லாமல் தொடர்ந்து ஆர்ஜென்டீனாவுக்கும் விஜயஞ் செய்ய விருப்பம் கொண்டிருப்பது அவருடைய சமரச பிரயத்தனத்தின் பெருமையைக் காட்டுகின்றது. அவர் போகுமுன் விடயம் முடிவடைந்து விடுமோ?

இன்றைய நிலையில் ஐ. நா. மட்டுமல்ல, பேருநாடு, பனாமா, பிரேசில், அயர்லாந்து போன்ற நாடுகள் நியாயமான போர்நிறுத்த யோசனைகள் வழங்குகின்றன; இவற்றுள் மிக நீதியான ஆலோசனையை பிரேசில் சமர்ப்பித்திருக்கிறது; பிரிட்டனும் ஆர்ஜென்டீனாவும் தங்கள் படைகளை ஒரேநேரத்தில் வெளியேற்றவேண்டுமென்றும் ஐ. நா. தற்காலிக நிர்வாகம் ஒன்றை போக்லண்டில் அமைத்து, சமாதானப் பேச்சுகளில் ஈடுபடுவதே சிறந்த வழியென்றும் தெரிவித்திருக்கிறது.

சில மணித்தியாலங்களுக்குள் வெற்றியைக் காண முடியுமென்று கருதும் பிரிட்டன் ஆர்ஜென்டீனாவுடன் பேசுவதற்கு வெற்றியே அவசியமெனக் கருதுகிறது.

அது அவ்வாறாயினும் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நாம் பழைய பல்லவியைப் பாட நியாயம் உண்டு.

இன்றைய யுத்தத்தில் பெரியவர் சிறியவர் என்ற பண்டைய பாகுபாடு கிடையாது; யாரிடம் நவீன ஆயுதம் உண்டோ அவர் தோல்வியடைந்தாலும், எதிரியை ஒரு 'கைபார்க்க' முடியும்; இரண்டாவது, எதிரிகள் யாரென்று இன்றைய போரில் இனங்காண்பது கடினம்; இரண்டு பேர்வழிகள் பிரபலப்பட்டாலும், உண்மையில் எதிரிகள் வேறு இருவராயிருக்கும்; அவர்களின் ஏஜண்டுகளே போரில் நேரடி பங்கு கொள்வார்கள்; இது ஒரு அபாயநிலை.

சமாதான முயற்சியில் ஈடுபட்ட அமெரிக்கா சடுதியில் பிரிட்டனுக்கு ஆதரவு தெரிவித்ததும், இன்று அது பிரிட்டனுக்கு எச்சரிக்கை விடுத்தலும், ரஷ்யா என்ன செய்யுமென்ற அச்சத்தில் பிறந்த செயல்களெனலாம்.

எந்த விதத்திலும், பிரிட்டனின் அனாவசிய சேதங்கள் – மூன்று சண்டைக் கப்பல்கள், உயிர்கள் முதலியன சமாதானம் தேடி அலையும் உலகுக்கு மாபெரும் ஏமாற்றமாகும்.

# பாடசாலைக் கல்வியைவிட ரியூட்டரிகளில் மோகம்

## மாணவரின் உடல்-உளம் பாதிக்கப்படுகிறது

('ரியூட்டரி'ப் படிப்பினால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி விரக்தியுற்ற பெற்றோர் ஒருவர் கவலையுடன் இக்கட்டுரையை எழுதியுள்ளார்.)

இன்று பிரத்தியேக கல்வி போதனா நிலையங்கள் பல உண்டு. இவற்றைப் பார்க்கும்போது, அரச பாடசாலைகளின் எண்ணிக்கைகளைவிட அதிகம். இவை ''மாற்றுப் பாடசாலை'' களாகவே இயங்குகின்றன. ரியூட்டரிகளில் ஒரு பிள்ளை ஒரு சிலபாடங்களை கற்கமுடியாது. முழு வகுப்புகளிலும் படிக்க வேண்டும். இதனை யார் விரும்புவது, பெற்றோர்களா? இல்லை' பெற்றோர்கள் இலவசக் கல்விக்குப்பதிலாகக் காசு கொடுத்துப் பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டியுள்ளது. தமது விருப்பத்துக்கு மாறாக பள்ளிக்கூடப் பதிவு, பரீட்சை எழுத ஒருவருக்குரிய லைசன்ஸ் ஆகும்.

இது ஏன் ஏற்பட்டுள்ளது? இதனைக் கல்வி இலாகா ஆராயக்கூடாதா? பாடசாலை மாணவ மாணவிகள் ஏன் பிரத்தியேக ரியூட்டரிகளுக்குப் போகின்றார்கள், யார் பொறுப்புஎன்று ஏன் ஆராய்வு நடத்தப்படாது? ஒன்றும் தெரியாதவர்கள்போலக் கல்வி இலாகா, அரசியல்வாதிகள், பெற்றோர்கள் இருக்கலாமா?

பாடசாலையில் ஆசிரியர் இல்லை, பாடத்திட்டம் முடிக்கப்படுவதில்லை, பாடத் திட்டப்படி போதிக்க ஆசிரியர் இல்லை, விளங்கப்படுத்துகிறார்கள் இல்லை. ஆசிரியர் அக்கறை இல்லையென்று மாணவர்கள் கூறுகின்றார்கள். ரியூட்டரிக்குப் போகாத மாணவர்கள் பின்தள்ளப்படுகிறார்கள், கவனிப்பும் இல்லை. சில ஆசிரியர்கள் தமது ரியூட்டரியில் வந்து படிக்கும்படி கூறுகிறார்கள். பிள்ளைகளுக்குக் கரைச்சல் கொடுக்கிறார்கள். இன்ன ரியூட்டரிக்குப் போய்ப் படிக்கவும் என்று கூறுகிறார்கள். சில ஆசிரியர்கள் ரியூட்டரியில் அதிகாலை 5, 6, 7 மணிக்கும் படிப்பிக்கிறார்கள். மாலையிலும் இதேமாதிரி லீவு போட்டு விட்டு ரியூட்டரிகளுக்குப் போகின்றார்கள். இந்த நிலை வேண்டுமா? யாருடைய நன்மைக்கு? பிள்ளைகள் ரியூட்டரிக்குப் போவதனால் பாடசாலைப் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை, ஆசிரியர்களை மதிப்பதில்லை என்று ஆசிரியர்கள் கூறுவது நகைக்கக்கூடியதாகத் தோன்றவில்லையா?

பிள்ளைகள் படிக்கின்றார்களா? மீட்க நேரம் உண்டா? எதனைப் படிக்கின்றார்கள்! எந்போது படிக்கின்றார்கள்?

### மாயசக்கரம்

காலை 5 மணிக்கு எழும்பி 6மணி மட்டும் படிக்க இருக்கின்றார்கள். பின்பு 7மணிக்கு றோட்டில் நின்று பஸ் எடுக்கிறார்கள். பிறகு 4மணிக்கு வீடு திரும்புகிறார்கள், சில சமயம் திரும்புவதில்லை. ரியூட்டரிக்குப் போகிறார்கள். 8மணிக்கு வருகிறார்கள், சாப்பிடுகிறார்கள், படுக்கைக்கு செல்கிறார்கள். பிள்ளைகட்கு ஓய்வில்லை உணவையும் உரிய நேரத்தில் எடுப்பதில்லை தேக ஆரோக்கியம் கெடுகிறது. வீட்டிலும் பெற்றோருக்கும் வீட்டுவேலைகளில், தோட்ட வேலைகளில் உதவி செய்வதில்லை. விளையாடுவதும் இல்லை. விளையாட்டுப் பயிற்சிகளும் பெறுவதில்லை.

இப்படி மாயசக்கரமாக இது நடக்கிறது.

மாணவர்கள் எதிர்காலச் சந்ததியினர். அவர்கள் சிந்தித்துப் படிக்கவேண்டும். தமிழில் கட்டுரை எழுதும் ஆற்றல் போதியதாக இல்லை. ஒரே தவணையில் ஒரே பாடத்திட்டப்படி எல்லாப் பாடசாலைகளிலும் போதனை இல்லை. என்ன போதிக்கப்பட்டது, என்ன பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. என்பதனை அப்பியாசக் கொப்பிகளிலேதான் காண வேண்டும் அப்படி நடைபெறுகிறதா? கெட்டித்தனம் இல்லாமல் கெட்டித்தனமாக இருக்க முயலலாமா? பாடசாலை விட்ட மாணவர்கட்கு ரியூட்டரி தேவை. பாடசாலை மாணவர்கட்கும் ஒரு சில பாடத்திற்கு உதவி செய்ய, மறுப்பதற்கில்லை. முழுநேரமும் பாடசாலையில் படிப்பித்தால், ரியூட்டரிகட்குச் சென்று போதிக்க ஆசிரியர்கட்கு எப்படிச் சக்தி கிடைக்கிறது. அதுவும் குறிப்பாகப் பாடசாலை நாட்களில்?

### தடுக்கவேண்டும்

பாடசாலை மாணவர்கள் ரியூட்டரிகட்குப் போகப்படாது. அப்படி என்றால் ஒரு சில பாடங்கட்குப் போகலாம் அதுவும் கிழமையில் 3–4 நாட்களுக்கு ஆனால் மறு பாடசாலைபோல ரியூட்டரிகள் பாடசாலை மாணவர்கட்கு இருக்கப்படாது. இதனை முதலில் பாடசாலை நிர்வாகம் நிறுத்தவேண்டும். மாணவர்களைத் தனித்தனியாக விசாரித்து காரணிகளை அறிந்து திருத்த வேண்டும். ஒழுக்கக் கேட்டுக்கும் பாடசாலை நிர்வாகம் பொறுப்பாக இருக்கப்படாது. பாடசாலையில் ஒரு வகுப்பில் 50 பிள்ளைகளில் 40 பிள்ளைகள் ரியூட்டரிக்குப் போகும்போது, மிகுதியில் 5–6 போகாமலிருப்பது இல்லை. அங்கு கூடப் படிப்பிக்கின்றார்கள், நாங்கள் குறைவுபடப்படாது, என்று கேட்டுப் போகின்றார்கள். போக வைக்கச் செய்கிறார்கள். ரியூட்டரிகளில் 2ம் வகுப்புத் தொடக்கம் உள்ள பாடசாலை மாணவர்கள் இருக்கின்றார்கள்.

பாடசாலைகளில் திடீர் பரிசோதனை நடக்கலாம். அதற்கு முன் முன்னோடியாக ரியூட்டரிகட்கு அநேகமாக இரவிலும் சனி, ஞாயிறு காலை மாலையி

(7–ம் பக்கம் பார்க்க]

## வரப்பெற்றோம்

நவாலியூர் திரு. க. சோமசுந்தரப்புலவரினால் இயற்றப் பெற்ற கந்தபுராணக்கதைகளும் அவைகளுணர்த்தும் உண்மை நூற்கருத்தும் என்ற நூற்பிரதி வரப்பெற்றோம்.

இலங்கையில் நடைபெற்ற உலக இந்து மகாநாட்டிற்கு வருகைதந்த சைவ அறிஞர்களுக்கு அன்பளிப்புசெய்வதற்காக இந்நூலின் மூன்றாம் பதிப்பு பல்வைத்தியகலாநிதி பா. சோ. பாரதி அவர்களால் வெளியிடப்பெற்றுள்ளது.

× ×

அகிலஉலக இந்து மகாநாட்டையொட்டிவெளியிடப்பட்ட மில்க்வைற் செய்தி 76–வது சிறப்பிதழ் வரப்பெற்றோம்.


முழுக்கவும் சமயவிஷயங்களையே தாங்கி வெளிவந்துள்ள இச்சிறப்பிதழ் வைத்துப் பேணத்தக்கவிதத்தில் அமைந்துள்ளது. சிவ சின்னங்களைக்கொண்ட விசேஷ இதழ் ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'பெ'

## திருக்கேதீஸ்வரம் 3-ம் திருவிழா

## முழவினைத் தரித்தாய் போற்றி!

பவவினை யறுப்பாய் போற்றி!
தவபலன் அளிப்பாய் போற்றி!!
பழவினை துடைப்பாய் போற்றி!
தொடர்வினை தொலைப்பாய் போற்றி!!
தொழவினை களைவாய் போற்றி!
முழவினைத் தரித்தாய் போற்றி!!
அரவினை அணிந்தாய் போற்றி!
கௌரீஸ்வரா போற்றி போற்றி!!

— முருகு



புலோலி ஞானசபபந்தர் கலைமன்றத்தின் கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினத்திடமிருந்து பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வன் சஞ்சீஜ சின்னத்துரை பரிசுபெறுவதை இங்கு காணலாம்.

# சிகரட் வான் துப்பாக்கி முனையில் கொள்ளை!

(வவுனியா)

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி வந்த சிசரட் வான் ஒன்று வழிமறிக்கப்பட்டு முகமூடி அணிந்த இளைஞர்களினால் கொள்ளையடிக்கப்பட்டது.

மன்னார்-மதவாச்சி வீதியில் 107ம் கட்டைக்கருகே துப்பாக்கி சகிதம் வானை மறித்த முகமூடி அணிந்த இரு இளைஞர்கள் 12,260 ரூபாவைக் கொள்ளையடித்தனர் என்றும் இரு இளைஞர்களும் வானில் இருந்தவர்களைச் சிங்களத்தில் மிரட்டியதாகவும், கொள்ளையடித்தபின் இருவரும் காட்டு வழியே ஓடி மறைந்துவிட்டதாகவும், வானில் வந்த முருகேசு நடராஜா, செல்லத்துரை ஆகிய இருவரும் வவுனியா பொலிசாரிடம் தெரிவித்த புகாரில் கூறியுள்ளனர்.

வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி திரு டி. எஸ். கிருஷ்ணராசா, சார்ஜண்ட் ஹுசைன் ஆகியோர் தீவிர விசாரணையில் ஈடுபட்டுவருகின்றனர். (கி)

# "கடவுளிடமிருந்து மனிதன் விலகிச் செல்கிறான்"

## இந்திய சாது கவலை

(அரியாலை)

"மனிதன் இறைவனோடு சேர்ந்து இருக்காவிட்டால் அவனது வாழ்வு வீணாகும். இறைவன் மனிதனைத் தனது சாயலாகப் படைத்தார். ஆனால் அந்த மனிதன் இறைவனை விட்டு விலகிப்போகின்றான்" என்று இந்தியா கன்னியாகுமரியைச் சேர்ந்த சாது ஐசக் கிறிஸ்ரியன் அடிகளார் யாழ்ப்பாணம் பரி. யோவான் ஆலயத்தில் நடைபெற்ற மாணவ மாணவிகளுக்கான விசேட ஆராதனையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

பரி. யோவான் ஆலய சேகரக் குரு அருட்திரு யே. சர்வானந்தன் அடிகளாரின் அனுசரணையுடன் இவ்வாராதனை நடைபெற்றது. (அ)

# வசதிக் கட்டண ஆசிரியர் பிரச்னை

## அபி. சபைத்தலைவருக்கு விளக்கப்பட்டது

(மாவிட்டபுரம்)

வசதிக் கட்டணத்தில் கடமைபுரியும் ஆசிரியர்களது பிரச்னைகள் குறித்து யாழ். அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு சு. நடராசாவிடம் எடுத்துக் கூறப்பட்டதையடுத்து அவை குறித்து ஆவனசெய்வதாக அவர் உறுதியளித்துள்ளார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் வசதிக் கட்டணத்தில் கடமை புரியும் ஆசிரியர்கள் சங்கம் நடத்திய கூட்டமொன்றில் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. நடராசாவும் கலந்து கொண்டார்.

சங்கத் தலைவர் திரு. அருள் மரியதாஸ் தலைமையில் கூட்டம் நடந்தது.

வசதிக் கட்டணத்தில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என்பது உட்பட மற்றும் பல்வேறு விஷயங்கள் இக் கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டன.

அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா பேசுகையில்: வசதிக் கட்டணத்தில் கடமை புரியும்ஆசிரியர்களுக்கு அவர்களது தகுதியை ஆராய்ந்து அதனடிப்படையிலேயே ஆசிரி நியமனங்களை ஏற்படுத்திக் கொடுக்கமுடியுமெனவும், அதற்குத் தாம் ஆவன செய்வதாகவும் உறுதியளித்தார். (அ)

# கிளிநொச்சிக்கு கொழும்பு பேராயர் வருகிறார்

[அரியாலை]

கொழும்பு திருமறை மாவட்டப் பேராயர் பேரருட்திரு சுவீதின் பெர்னாண்டோ ஆண்டகை கிளிநொச்சிப் பகுதிக்கு உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற்கொண்டு அடுத்த மாதம் முற்பகுதியில வருகை தரவுள்ளார்.

அடுத்த மாதம் 2ந் திகதி தர்மபுரம் பரி. லூக்கா தேவாலயத்தில் நடைபெறும் திடப்படுத்தல், திருவிருந்தாராதனையிலும், 3ந் திகதி மாலை கிளிநொச்சி கருணா நிலைய தேவாலயத்தில், நடைபெறும் திடப்படுத்தல் திருவிருந்தாராதனையிலும் கலந்துகொண்டு அருளுரைகள் நிகழ்த்துவார்.

இவ்வாலயங்களின் பங்குக் தருவும், கோப்பாய் பரி. மரியாள் ஆலய சேகரக் குழுவுமான அருட் திரு ஐசக் செல்வரத்தினம் அடிகளாரின் அனுசரணையுடன் நடைபெறும் இவ்வாராதனைகளுக்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணத் திருமறை மாவட்ட ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளார் செய்துள்ளார். [அ]

# ★ யாழ். வன்செயல் தனிநபர், தனியார் நிறுவனங்களுக்கு ரூ.1கோடி 24,13,386 நஷ்டஈடு கிடைக்கும்

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயலால் பாதிக்கப்பட்ட நூலகம் தவிர்ந்த ஏனைய தனியார் நிறுவனங்கள் தனியார்கள் ஆகியோருக்கு "லயனல் குழுவின்" சிபார்சின்படி 1 கோடியே 24 லட்சத்து 13 ஆயிரத்து 386ரூபா 30 சதம் வழங்கப்பட இருக்கிறது.

நேற்றுமுன்தினம் பாராளுமன்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

யாழ். நகரில் இடம்பெற்ற வன்செயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'நஷ்டஈடு' வழங்குவது குறித்து ஆராய்ந்த 'லயனல் குழு' 2 கோடியே 86 லட்சத்து 27 ஆயிரத்துத் 936 ரூபா 80 சதத்தை நஷ்டஈடாக வழங்கவேண்டும்என்று சிபார்சு செய்திருந்தது. இச்சிபார்சின்படி இத்தொகையில் 1 கோடியே 2 லட்சத்து 14 ஆயிரத்து 600 ரூபாவை யாழ். நூலகத்துக்கு வழங்குவதென்றும் அமைச்சரவை முடிவு செய்திருந்தது தெரிந்ததே.

## மத்திய வங்கியில் தனியான கணக்கு

இதே வேளையில் யாழ். நூலக புனரமைப்புக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள 10 லட்சம் ரூபாவுடன் மத்திய வங்கியில் புதிய கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நூலக புனரமைப்புக்கு உதவி விரும்புவோர் இந்த ஜனாதிபதி நிதியில் வைப்பிலிடுவதற்கு வசதி செய்யுமுகமாகவே இக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ம-இ]

# கெருடாவில் கிராமோதய சபைத் தலைவர்

[புலோலி]

கெருடாவில் கிராமோதைய சபைத் தலைவராக திரு. பொன்னுச்சாமி சுந்தரலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கெருடாவில் கிளை, கெருடாவில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் தலைவருமான திரு. பொ. சுந்தரலிங்கம் சிறந்த சமூக சேவையாளருமாவார். [இ]

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 14ம் திகதி

வெள்ளிக்கிழமை

(28—5—82)

**மேடம்:** இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். செய்தொழிலாலும் சிறப்புண்டு. நல்ல தினம்.

**இடபம்:** பொன்னானவாழ்வு பெண்ணாலே கிட்டும். கண்ணியம் கடை விரிக்கும். கடமையும் சிறக்கும். உழைப்பினால் முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்:** பிரிவின் தாக்குதலில் வேதனைப்படுவீர்கள். தற்பெருமைக்காக தவறானபாதையில் காலடி எடுத்து வைக்க நேரிடும். அவதானம் வேண்டும்.

**கடகம்:** ஏமாற்ற வேலைகள் இடம்பெறும். வியாபாரிகள் புதிய முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும். குடும்பத்தில் அமைதியும் குன்றும்.

**சிங்கம்:** வாழ்க்கை மலர் தூவிய மஞ்சமாகக் காட்சியளிக்கும். இன்பத்தின் எல்லைக்கே இழுத்துச் செல்லப்படுவீர்கள். சுற்றுலா மேற்கொள்ளப்படு .

**கன்னி:** ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்தி விடுவதற்குச் சிலர் திட்டம் போடுவார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சி வேண்டும்.

**துலாம்:** மதிவழி நடப்பின் மற்றவர்கள் பெருமைப்படும் அளவிற்கு முன்னேற்றமுண்டு. அறிஞர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

**விருச்சிகம்:** இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்ட பிரயாணம் குறித்து திட்டமிடப்படலாம். பிள்ளைகளின் நடவடிக்கை பெருமையைத் தரும்.

**தனு:** துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். இன்று அதிக பேச்சைத்தவிர்த்துக் கொள்ளவும். அரசியல் வாதிகளாயின் மிகவும் அவதானம் வேண்டும்.

**மகரம்:** குடும்பத்தில்அமைதி குன்றும். களஸ்திரப் பேச்சும் உண்டு. கண்ணியமான நாள். பெற்றோர் ஆதரவும் கிடைக்கும். நல்ல தினம்.

**கும்பம்:** எண்ணிய நல்தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக் கூடும். நிதான புத்தியுடன் நடந்து கொள்வது நன்று.

**மீனம்:** உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும். உறவினர் உதவுவதற்கு முன்வருவார்கள். பத்திரிகைத்துறையில்தொழில் புரிவோர் பாராட்டப்படுவர்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# அரியாலை அன்னைஉற்சவம்

[யாழ்ப்பாணம்]

அரியாலைகிழக்கு அன்னை வேளாங்கண்ணி மாதா திருவிழா நாளை சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுகிறது.

சனியன்று பிற்பகல் திருப்பலிப்பூசையும் நற்கருணை ஆராதனையும் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிப்பூசையும் அன்னை திருச்சுரூப பவனியும் இடம்பெறும்.

உற்சவத்தை முன்னிட்டு சனி, ஞாயிறு இருதினங்களும் அரியாலைக்கு விஷேச பஸ் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# வேதாகம அறிவுப்போட்டி

(புலோலி)

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கிடையே வேதாகம அறிவுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

4ம் வகுப்புத் தொடக்கம்
[7-ம் பக்கம் பார்க்க]

YAMAHA

உதிரிப் பாகங்களுக்கு அலைந்து திரியத் தேவையில்லை

உதிரிப்பாகங்களின் விடயத்தில் நீங்கள் விழிப்பாய் இருத்தல் வேண்டும். அன்றேல் யமஹா மூலம் நீங்கள் இதுவரை அனுபவித்த தரமான செயலாற்றலை இழக்க நேரிடும். நீங்கள் பொருத்தும் ஒவ்வோர் உறுப்பும் அசல்

யமஹா

உதிரிப்பாகங்கள் என்பதனை உறுதிப்படுத்துங்கள்

தரமான தயாரிப்பு யமஹா.
அதன் தரம் குன்றுதிருக்கப் பாவியுங்கள்,
யமஹா உதிரிப்பாகங்கள்

உதிரிப்பாகங்களின் கையிருப்புகள் நாடெங்கும் உத்தரவுபெற்ற வியாபாரிகளிடமும், எம்மிடமும் ஏராளம் உண்டு.

ஏக விநியோகத்தர்கள் :
AMW
அஸோஸியேட்டட் மோட்டார்வேய்ஸ்
185, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 2.
தொலைபேசி : 33371-78

யமஹா-ஒரு வாழ்க்கைமுறை

TEAM

YAMAHA

3311

அரச உதவியோடு

# "தமது பிரதேசத்தை முன்னேற்ற விரும்பியவர்"

## அமரர் தியாகராசாவுக்கு அஞ்சலி

[பண்டத்தரிப்பு]

''தமது பிரதேசத்தை அரசின் ஒத்துழைப்போடு முன்னேற்றவேண்டுமென்ற தீர்க்க தரிசனத்துடன் கடந்த மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து அமரர் கலாநிதி தியாகராசா போட்டியிட முன்வந்தார். பதவியில் இருக்கும் அரசுடன் ஒத்துழைத்து, அரசின் ஆதரவுடன் பொருளாதார முன்னேற்றம் காண முன்வந்த திரு தியாகராசா இன்று வாழ்ந்திருந்தால் இப்பகுதி பெரும் வளர்ச்சியைப் பெற்றிருக்கும். அவர் கடப்பட்டு இறந்ததால் இப்பகுதி சிறந்தசொரு நேர்மையான சேவையாளரை இழந்து விட்டது.''

இவ்வாறு யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு பி. விஜயக்கூன், காரைநகர் இந்துக் கல்லூரியில் நேற்று இரவு நடைபெற்ற வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னுள் எம் பி கலாநிதி. தியாகராசாவின் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அமரர் தியாகராசா ஞாபகார்த்த அமைப்புக் குழுவினுல் ஏற்பாடுசெய்யப்பட்ட இக் கூட்டத்திற்கு முன்னுள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு சி. சுப்பிரமணியம் தலைமைவகித்தார். பெருந்திரளான மக்களும், பிரமுகர்களும் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் மாவட்ட அமைச்சர் திரு விஜயக்கூன் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

''மிகவும் புத்திசாதுரியம் வாய்ந்த ஒரு அரசியல் ஞானியின் ஞாபகார்த்தமான நினைவாஞ்சலியில் இங்கு நாம் கூடியிருக்கிறோம். அடிக்கடி கட்சி விட்டுக் கட்சி மாறுபவராக திரு. தியாகராசா இருந்தார் என்று சிலர் குறைசொல்வதாகக் கேள்விப்பட்டேன். மக்களுக்கு உண்மையான சேவை செய்யவேண்டுமானுல் -தமது பின் தங்கிய பிரதேசத்தை அபிவிருத்திசெய்து பொருளாதார முன்னேற்றம் காண வேண்டுமானுல் பதவியிலிருக்கும் அரசாங்கத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை, என்பதை நன்கு அறிந்தவர் அமரர் தியாகராசா. இதனுல் கடந்த 1970ம் ஆண்டுபொதுத் தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு வட்டுக்கோட்டை தொகுதி எம். பி யாக தெரிவு செய்யப்பட்ட அவர் அப்போது பதவியிலிருந்த அரசாங்கக் கட்சியில் சேர்ந்து கொண்டுதமதுதொகுதி அபிவிருத்திக்காக பாடுபட்டார். பின்தங்கியிருந்த தமது பகுதியான காரைநகரில் மக்களை நீண்டகாலமாக எதிர்நோக்கியிருந்த குடிதண்ணீர்ப்பிரச்னை உட்பட பொது வீதி புனரமைப்பு, சுகாதார அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி ஆகிய பல்வேறுதுறைகளிலும் பெரும் திட்டங்களை செயற்படுத்தி அபிவிருத்தியை ஏற்படுத்திஞர். வட்டுக்கோட்டைத் தொகுதி இன்று காணும் அபிவிருத்திகள் அமரர் தியாகராசாவின் காலத்திலேயே நிறைவேற்றப்பட்டவை. அவர் எதிர்க்கட்சியில் எம். பி.யாக இருந்திருந்தால் இந்த அபிவிருத்தி வேலைகளைச் செய்திருக்கமுடியுமா'என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இப்பகுதியில் அவர் விட்டுச் சென்ற பணிகளை தேவையான உதவிகளை நிறைவேற்றித்தருவதற்கு நான் என்றும் ஆயத்தமாக இருக்கின்றேன்''.

திரு நாவேந்தன் உரையாற்றுகையில் இலஞ்ச ஊழல் எதுவுமற்ற நேர்மைமிக்கசொரு கல்விமானுக விளங்கிய அமரர் தியாகராசா பொதுப்பணிகளுக்கு தமது சொந்தசொத்தைக்கூடச் செலவிட்டவர் என்றும் சாதாரண மக்களையும் மதித்து நடந்த அவர் ஒரு அரசியல்வாதியல்ல அவரை ஒரு அரசியல் ஞானியென்றே கூறவேண்டும் என்ருர்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க. அருணுசலம் அஞ்சலி செலுத்துகையில் கல்வித்துறையில் பலசாதனைகளை நிலைநாட்டிய அமரர் தியாகராசா தமது எம். பி. பதவிக் காலத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் பெருந்தொண்டாற்றிஞர். என்று குறிப்பிட்டார்.

முன்னுள் கல்லூரி அதிபரும், கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகருமான திரு. அ. வைத்திலிங்கம் உரையாற்றுகையில் ஒரு சிறந்த சமதர்மவாதியாகதிகழ்ந்த அமரர் தியாகராசா பேச்சளவில் மாத்திரமல்ல செயலளவிலும் செய்து காட்டி வாழ்ந்தார் என்றும் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தாம் பல தடவைகள் போட்டியிட்டுப் பெறமுடியாத வெற்றியை அமரர் தியாகராசா பெற்று ஒரு சாதனையை நிலைநாட்டினுர் என்றும் குறிப்பிட்டார்'

இவ்விழாவில் சட்டத்தரணி திரு. எம். கே. சுப்பிரமணியம் யாழ்,பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர் திரு. ஆர். கனகசுந்தரம், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. வி. இராமகிருஷ்ணர், வித்துவான் க. முருகேசன், ஆகியோர் உட்பட மற்றும்பலர் உரை நிகழ்த்திஞர்கள், காரை. இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் பா. அருளானந்தம் இயற்றிய அஞ்சலிக்கவிதையும் இடம் பெற்றது.

விழா இறுதியில் அமரர் தியாகராசாவின் இறுதி ஊர்வலம்பற்றிய திரைப்படமும் வீடியோ மூலம் காண்பிக்கப் பட்டது.

# கொள்ளை வழக்கில் எதிரிகள் குற்றவாளிகள்

[புலோலி]

துன்னுலை அருள் சிவானந்தம் வீட்டு 47,500 ரூபா கொள்ளைச்சம்பவ எதிரிகள் இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அடுத்தமாதம் முதலாம் திகதி தண்டனை வழங்கப்படும்.

துன்னுலையைச் சேர்ந்த வயிரமுத்து அருள் சிவானந்தம் என்பவரின் வீட்டு யன்னலை உடைத்து உட்புகுந்து அங்கிருந்த 47,500 ரூபா பெறுமதியான தங்க நகைகள் புடவைகள் என்பன கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து துன்னுலை தெற்கைச் சேர்ந்த மகாலிங்கம் தம்பிராசா பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த நாகமுத்து தெய்வேந்திரன் ஆகிய இருவருக்குப் எதிராகப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

இக்கொள்ளை வழக்குப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. பொலிஸ் சார்ஜன்ட் கே, சிவரத்தினம் வழக்கை நடத்திஞர்.

நீதவான் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு கைவிரல் அடையாளத்தை பதிவு செய்ய உத்தரவிட்டு தண்டனை வழங்குவதை அடுத்த முதலாம் திகதிக்கு ஒத்திவைத்தார். [அ

# மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்

(புலோலி)

கம்பர்மலை தங்கலிங்கம் துப்பாக்கிச் சூட்டுக் கொலை வழக்கு மேல் விசாரணைக்காக மேல்நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

1980 நவம்பர் 6-ம் திகதி கம்பர்மலையைச் சேர்ந்த மா. தங்கலிங்கம் என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த நா. கருணேஸ்வரன், நா. அழகேஸ்வரன், க, நாராயணசாமி ஆகியோர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக வல்வெட்டித்துறை பொலிசார் பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கின் முதலாம் எதிரியான கருணேஸ்வரன் ஏற்கனவே கொலை செய்யப்பட்டு விட்டார். இரண்டாம் எதிரி வல்லைமுக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்ற முறையில் விளக்கமறியலில் இருந்து வருகின்ருர். மூன்ரும் எதிரி பிணையில் இருந்து வருகின்ருர்.

முதலாம் எதிரி இல்லாத நிலையிலேயே வழக்கு விசாரணையை நடத்தி முடித்த பருத்தித்துறை நீதவான் திரு கே.எஸ். மகேசன்வழக்கைம் ல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தியுள்ளார்.

# திருவிழா

(பண்டத்தரிப்பு)

சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

அடுத்த மாதம் 5-ம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (அ)

# கிளிநொச்சி இ ம.வி. கலைவிழா

[கரவெட்டி]

கிளிநொச்சி இந்துமகாவித்தியாலயத்தின் கலைவிழா அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி லோங்ஸ்தாபன அதிபர் வண. பிதா ரி. ஏ. ஜே. மதுரநாயகம் அடிகளார் ஆரம்பித்து வைக்கும் இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி கலந்து கொள்கிருர். [அ]

கல்வித் திணைக்களத்தில்

# கத்தோலிக்க ஆசிரியர்கள்; உயர் பதவிகளில் குறைவாம்

(கரவெட்டி)

''கத்தோலிக்க ஆசிரியர்கள் கல்வித்திணைக்களத்திலே உயர் பதவிகளில் மிகமிகக் குறைவாகவேயுள்ளனர். இவர்களுடைய பதவிஉயர்வுக்குத் தடையாயிருப்பதன் காரணத்தை அறிந்து பரிகாரம் காணப்படவேண்டியது அவசியமானது''

இவ்வாறு யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பரிபாலகர் அருட்திரு ஜே நீக்கிலஸ் அடிகளார் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிமன்ற அலுவலர் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையுல் குறிப்பிட்டார்.

கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. ஆர். யோசெவ் தலைமையில் யாழ் மறைக் கல்வி நடுநிலையத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பரிபாலகர் அருட்திரு நீக்கிலஸ் அடிகளார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''எமது சங்கம் இயங்கிக் கொண்டிருக்கும் வேளையில் ஆரம்பத்திலேயே சங்கத்தில் இருந்து சிலர் ஒதுங்கிவிட்டனர். இன்னும் சிலர் சங்கத்தில் செயற்பட்டுக்கொண்டு இருந்துவிட்டு இடையில் விலகிவிட்டார்கள். சங்கத்தில் ஏற்பட்டிருக்கும் தளர்ச்சிக்கான காரணத்தை ஆராயவேண்டும். சேர்ந்து கலந்துரையாடிக் கருத்துக்களைப் பரிமாறுவதன்மூலமே பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளலாம். பதவிவிலகல் கடிதங்களைப் பொதுச்செயலாளருக்கு அனுப்பிவிடுவதால் மாத்திரம் பிரச்னைகள் தீர்ந்துவிடப் போவதில்லை.

கத்தோலிக்க ஆசிரியர்கள் கல்வித்திணைக்களத்திலே உயர் பதவிகளின் மிகமிகக் குறைவாகவே யுள்ளனர். இவர்களுடைய பதவிஉயர்வுக்குத் தடையாயிருப்பவைகளைக் கண்டு வேண்டிய பரிகாரம் காணவேண்டும். உயர்கல்வி பெற வாய்ப்பற்றவர்களுக்கு வாய்ப்பளிக்கக் கூடியவகையில் சங்கம் ஆவனசெய்யவேண்டும்.

சங்கப் பொதுச்செயலாளர் திரு. சி. வின்சென்ற் கடந்த கூட்டறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசினுர்.

# ஊர்காவல் படைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரப்பகுதியில் ஊர்காவல் படைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

21 வயதுக்கு மேற்பட்டவர்களும், நன்னடத்தை உள்ளவர்களும் இதில் சேரலாமென்றும் இதற்குரிய விண்ணப்பப்பத்திரத்தை யாழ் உதவி அரசாங்கஅதிபர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாமெனவும் யாழ் உதவிஅரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார். (இ)

# குறிகாட்டுவான்-நயினுதீவு படகுச்சேவை

[நயினுதீவு]

குறிகாட்டுவான் -நயினுதீவு படகுச்சேவை அடுத்த மாதம் தொடக்கம் புங்குடுதீவு ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தினதும், நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய தர்மகத்தா சபையினதும் நிர்வாகத்தின் கீழ் இயங்கவுள்ளது.

படகுக் கட்டணமாகத் தற்போது நடைமுறையில் உள்ள ஒரு ரூபாய் ஐம்பது சதமே அறவிடப்படவுள்ளது.

# உரக் களஞ்சியம்

(புலோலி)

சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புலோலி கமநலச்சேவை நிலைய தொண்டமானுறு - கெருடாவில் உரக்களஞ்சியத்தை கெருடாவில் கிராமோதய

(7ம் பக்கம் பார்க்க)


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF

குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு ''மேற்கு ஜெர்மனி "BASF" தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்

500 கிராம் ரூபா 12/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

M LIMITED மக்வுட்ஸ் ஸ்தாபனம்

297, யூனியன் பிளேஸ் கொழும்பு 2.

தொலைபேசி: 32941-5

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

ரீகல் ... லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
பெற்றால்தான் பிள்ளையா
(புத்தம்புதிய பிரதி)

வெஸ்லி 3-6-82 வரை
(மானிப்பாய்) தினசரி 6-15, 9-15, சனி, ஞாயிறு 2-30
கமல் - ஸ்ரீபிரியா - நம்பியார்
நீயா?
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி]
(கலர்)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
All that work; All that glitter;
All that pain; All that love; All that crazy;
Rhythm
All that Jazz
Roy Scheider, Jessica Lange, Ben Vereen
ALL THAT JAZZ
Directed by Bob Fosse—For Adults Only
No one under 18 yrs. admitted.

மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
3-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
கார்த்திக் ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்]

ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்... ஹவுஸ் புல்...
சாந்தி 10-30, 2-30, 6-15, 9-45
(யாழ்நகர்)
வெற்றிப்படம் 'குரு' தயாரிப்பாளர்களின்
மற்றுமோர் வெற்றிப்படைப்பு!
2-வது ஜனத்திரள் வாரம்



தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டி காட்சியளித்த விறுவிறுப்பு மிகு வண்ணத்திரையோவியம்
கமல் (இருவேடங்கள்)
சுஜாதா, சுமன், தேங்காய், நாகேஷ்.
கடல் மீன்கள்
தவிர்க்கமுடியாத காரணங்களால் காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்படுவதால் ஆசனங்கட்கு முந்துங்கள்

ராஜா தினசரி 10-30, 2-30, 6-15,
(யாழ்ப்பாணம்) இரவு 9-30
கொட்டகை நிறைந்த காட்சிகளாக

பல படங்கள் போட்டிக்கு வந்தும் தொடர்ந்து வசூலில் சாதனை பலர் டிக்கட் இன்றித் திரும்புகின்றனர். இப்படத்திற்கு மாதர்கூட்டம் அலைமோதுவதால் உங்கள் டிக்கட்டுக்கு முந்துங்கள்.



ஸ்ரைல் நடிகர் ரஜனிகாந்
விஜயன் கராத்தே மணி
சுஜாதா ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

## மட்டுவில் ஆலய முகாமையாளர் கொலை

# 1-ம் எதிரி விடுதலை; 2-ம் எதிரியை உயர் நீதிமன்றத்தில் ஆஜராகஉத்தரவு

(மட்டுவில்)

மட்டுவில் செல்வ விநாயகர் ஆலய முகாமையாளர் இராமலிங்கம் கொலைவழக்கில், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனாப் எம். எச். காரியப்பர் முதலாவது எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். இரண்டாவது எதிரியை உயர் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

மட்டுவில் செல்வ விநாயகர் ஆலய முகாமையாளர் சதாசிவம் இராமலிங்கம் என்பவரை, 1980-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி பெருங்குளம் கல்வயல் வீதியில் வைத்து கொலை செய்ததாக மட்டுவிலைச் சேர்ந்த வி. இளையதம்பி, இ. சிவசுப்பிரமணியம் ஆகிய இருவர்மீதும் குற்றம் சாட்டப்பட்டு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஜனாப் எம் எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் கண்கண்ட சாட்சிகள் இல்லாமையினால் முதலாம் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்ததோடு, இரண்டாம் எதிரியை உயர் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (இ)

## பாடசாலைக்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

லும் சென்று பாடசாலை மாணவர்கள் வரவு பற்றி அறிந்து பாடசாலையில் விசாரணை செய்ய வேண்டும். கட்டாயம் ரியூட்டரிக்குப் போய்த்தான் தெரிய வேண்டும். என்றில்லை. வகுப்புக்களிலேயே கேட்டு அறியலாம். காரணங்களை அறிய வேண்டும். அப்போதுதான் இலவசக்கல்வியின் பயனை ஏழைகள் பெறலாம். பிள்ளைகள் உண்மையான கல்வியைப் பெற வேண்டும். அவர்கள் மனிதர்கள் தான் ஆசிரியர்கள் மீது வெறுப்புக் கொள்ளப்படாது. அவர்கள் ஏமாற்றப்படப்படாது வீரக்தியடையப்படாது அவர்கள் ஓய்வு கொள்ள வேண்டும். தேக ஆரோக்கியம் கெடப்படாது

குறைந்த பிள்ளைகட்கு விசேட வகுப்புக்களை குறிப்பிட்ட சில நாட்களில் பாடசாலை முடிந்த பின் ஆசிரியர்கள் நடாத்தலாம். அதற்கான கட்டணத்தை அறவிடலாம். அதில் பிழை இராது. அரசாங்க ஆஸ்பத்திரி விசேட டாக்டர்கள்பெற்ற சலுகையை ஒத்ததாக இதுவும் இருக்கலாம்.

சிலபாடசாலைகளில் இலவசப்புத்தகங்கள் சில இன்னும் கொடுத்து முடியவில்லை கொடுக்கப்படவில்லை.

ரியூட்டரிகள் இங்கு யாழ்ப்பாணம் நெல்லியடி பருத்தித்துறையில் உள்ளது போல் எல்லாஇடங்களிலும் உண்டா?

பிள்ளைகளைக் கவனியாது மறைமுகமாக ரியூட்டரிகட்கு போகத்தூண்டுவோரைத் தண்டிக்க வேண்டும் ரியூட்டரிகட்குப் பிள்ளைகளைப் போச் செய்யும் நிலையைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

ரியூட்டரிகள் மாற்றுப் பாடசாலைகள் ஆகிய நிலையில் பாடசாலையில் படிக்கும் அத்தனை பாடங்களையும் ஈசுசட்டிப் படிப்பதனால் கல்வி வெள்ளை அறிக்கையை எதிர்ப்போர் இந்த விசயத்தில் என்ன எண்ணம் கொண்டுள்ளார்கள் எமக்கு என் போன்ற பெற்றோர்களையும் பிள்ளைகளையும் வழிப்படுத்துவார்களா? எமக்கு ஆலோசனை கூறுவார்களா?

பாடசாலைக்கு கட்டும் வசதிக்கட்டணங்களுடன் ரியூட்டரிகட்கு எல்லாப் பிள்ளைகட்குமாக தற்போது 300/- மாதம் செலவிடப்படுகிறது. பிரயாணம் உட்பட.

இதற்கு கல்வி அமைச்சு கல்விஇலாகா, நாட்டின் முதிர்ந்த கல்வி மான்கள், நிர்வாகிகள், தேசியவாதிகள், அரசியல் வாதிகள், நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## திருமுறை மகாநாடு

(மட்டுவில்)

குப்பிழானில் நாளையும், நாளை மறுதினமும் திருமுறை மகாநாடு நடைபெறுகிறது குப்பிழான் கற்கரை விநாயகர் ஆலய முன்றலில் ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு கா. நல்லையா தலைமையில் நடைபெறும் இம்மகாநாட்டில் தமிழ்நாடு பூம்புகார் கல்லூரிப் பேராசிரியர் திரு. அ. அகரமுதல்வன் 'திருமுறைப் பயன்' என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

நாளை பிற்பகல் குப்பிழான் சோதி விநாயகர் ஆலயத்திலிருந்து மங்கள வாத்திய சகிதம் திருமுறைச் சுவடிகள் விழா மண்டபத்திற்கு ஊர் வலமாக எடுத்துச் செல்லப்படும்.

இரு நாட்களும் சொற்பொழிவுகளும் பண்ணிசைகளும் இடம்பெறும். (இ)

## உரக்களஞ்சி...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தலைவர் திரு. பொ. சுந்தரலிங்கம் சம்பிரதாய பூர்வமாகத்திறந்துவைத்தார். புலோலி கமநலச்சேவைநிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எம். சின்னமணி மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார். பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களான திரு. து. துரைரத்தினம், திரு. க. இரத்தினம் உட்பட பலர் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர். (இ)

## வேதாகம...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

12-ம் வகுப்புவரையிலான மாணவர்களுக்கு ஐந்து பிரிவாக நடைபெறவுள்ள இவ் வேதாகம அறிவுப்போட்டிக்கான ஒழுங்குகளை சங்கப் பொதுச்செயலாளர் திரு சி வின்சென்ற் மேற்கொண்டுள்ளார். (இ)

ஹரன் யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
Clint Eastwood
EVERY WHICH WAY BUT LOOSE

ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி-வாணிஸ்ரீ
உயர்ந்த மனிதன்

ரீகல் தினசரி 10 30, 2 15 ... 0, 7.00, 9.30
(யாழ்நகர்)
THE CAR
வெகுவிரைவில் ஸ்ரீதரில்:
மோகனப் புன்னகை

## அதிர்ச்சி தந்த காலைச் செய்தி

இருளகன்று காலை மெல்ல வந்துகொண்டிருந்த அந்த வேளை என் காதுகளுக்கு எட்டிய அந்தச் செய்தி...... என் நெஞ்சில் இடி விருந்தாற்போலிருந்தது. ஆம் நல்லூரில் இராஜதானி அமைத்து யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி தமிழ் மன்னன் சங்கிலியனுக்குச் சிலை நிறுவ அரும்பாடு பட்டுழைத்த அரசபிள்ளை நடராசா விபத்தில் மரணமானார் என்ற செய்தி தான் அது. "நெருநல் உளனொருவன்- இன்றில்லை எனும் பெருமையுடைத்து இவ்வுலகு" என்ற பெருமைக்குரிய இப் பூவுலகு தன் பெருமைக்காக எத்தனை தலைவர்களை, மனிதருள்மாணிக்கங்களை, பறித்தெடுத்திருக்கிறது! அந்த வரிசையில்இன்று எம்மத்தியில் இருந்து அரசபிள்ளை நடராஜாவைப் பறித்தெடுத்துக்கொண்டது.

யார் இந்த நடராசா? "நடராஜாப் பரியாரியர்" எனப் பொதுமக்களால் செல்லமாக அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த அரச வைத்தியர் பரம்பரையில் வழிவந்தவர். அரசபிள்ளை நடராஜா இவரது தந்தையார் அரசபரம்பரையின் பத்தாவது பரம்பரை.

சங்கிலி மன்னன் காலத்திலிருந்தே இவர்களது மூதாதையர்வைத்தியத் தொழிலில் ஈடுபட்டு வைத்தியத் துறைக்கே பெருமை தேடித்தந்தவர்கள் இவர்களின் பூட்டனாரே 'இரகுவம்சத்தைத் தமிழில் தந்த அரசகேசரிப் புலவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1917ம் ஆண்டு ஆனி மாதம் 27ம் திகதி அரசபிள்ளைக்கு மகனாகப் பிறந்த நடராஜா 1955 ல் நாயன்மார்கட்டு வட்டாரத்தில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அரசியலில் பிரவேசித்து யாழ் மாநகர சபைத் தேர்தலில் வெற்றியீட்டி யாழ். மாநகரசபையின் உதவி மேயராக சபையில் பிரவேசித்த இவர் 1967ல் நல்லூர் வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

25 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இப்பகுதி மக்களுக்காகச் சபையில் அவர் சேவையாற்றினர்.

1943 ல் லட்சுமியம்மாவை இவர் கைப்பிடித்தார். இவரது மனைவியாருக்கு இலங்கை அரசு பிறப்பு1948ல் இறப்பு விவாகட்பதிவாளர் பதவி வழங்கி இலங்கையின் முதலாவது பெண் என்ற பெருமையை இவர்களது குடும்பத்திற்குத் தந்தது. 1966ல் திருமதி நடராஜா இயற்கை எய்தும்வரை இப் பதவி வகித்தார். திரு நடராஜாவின் நேர்மைக்குப் பரிசாக சமாதானநீதவான்பட்டத்தை அரசு அவருக்கு வழங்கிக் கௌரவித்தது.

அரசியலிலும்சரி பொது வாழ்விலும்சரி உண்மைக்காகவும், பொதுமக்களுக்காகவும் உழைத்தவர் அமரர்நடராஜா கடந்தபொதுத்தேர்தலில்கூட எத்தனையோ கட்சிகள்தாமாக இவருக்கு இடமளிக்க முன்வந்தபோதிலும் இளைஞர்களுக்கு இடம் கொடுக்கவேண்டுமென்ற நோக்குடன் தேர்தலிலிருந்து ஒதுங்கிவிட்டஅவரது இழப்பு நல்லூருக்கு மட்டுமல்ல எல்லாருக்குமே ஒரு நஷ்டம்.

தமது இறுதி மூச்சுவரை ஏழை மக்களுக்காக உழைத்து வந்தார். எதிர்பாராமல் இறைவனடி சேர்ந்து விட்டார். இவரது இறுதி ஊர்வலம் இன்று நடைபெறுகிறது.

அன்னாரது சேவைகளை நினைவு கூர்ந்து அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

க. தி. ரவீந்திரன்.

★ மாலினி மர்ம மரணம்:

# சிவகுமார் விடுதலை!

## விசாரணை ஜூன் 24க்கு ஒத்திவைப்பு

(கே. யோகநாதன்)

மாலினி மரண விசாரணை தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான சிவகுமார் நேற்று கிளிநொச்சி நீதவான் திரு கே. ஜெகசோதியினால் விடுதலைசெய்யப்பட்டார்.

''இதுவரை நடந்த விசாரணையில் போதிய சாட்சியமில்லாததினால் விடுதலை செய்வதாகவும், தொடர்ந்து நடைபெற்றுவரும் பொலிஸ் விசாரணைக்கு இடையூறு செய்யக் கூடாதென்றும், உடனடியாகச்சென்று பொலிஸாருக்கு வாக்குமூலமளிக்குமாறும் நீதவான் பணித்தார்.''

கிளிநொச்சி நீதிமன்றத்தில் நீதவான் கே. ஜெகசோதி முன்னிலையில், இவ்விசாரணை நேற்று எடுக்கப்பட்டது.

ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபனத்தின் விடுதியில் கடந்த மாதம் 14ம் தேதி, உப்புக் கூட்டுத்தாபன கணக்காளர் கே. மகேந்திரனின் மனைவியான மாலினி [21 வயது] மர்மமான முறையில் மரணமானது தொடர்பாகநடந்தமரணவிசாரணையில் றிமாண்டிலிருந்த சந்தேகநபரான சிவகுமாரை 31 வயது) யாழ்ப்பாண நீதவான் திரு. ரி. ஜோகநாதன் நேற்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணித்திருந்தார்.

கிளிநொச்சியில் பெரிய மண்டபத்தைக் கொண்ட புதிய நீதிமன்றத்தின் உள்ளேயும், விருந்தையிலும், பெண்கள் உட்பட ஏராளமானோர் கூடியிருந்தனர். ஆசிரியைகள், மாணவ மாணவிகள் வந்திருந்தனர். இறந்த மாலினியின் கணவரான கணக்காளர் மகேந்திரனும் வந்திருந்தார். காலை 9-30 மணிக்கு சந்தேகநபர் சிவகுமாரை நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்தபோது, அவரைப் பார்ப்பதற்கு விருந்தையில் நின்றவர்கள் முன்பக்கம் நோக்கிச் சென்றார்கள். கோடிட்ட நீளக் கைச் ஷேர்ட்டும் அதற்கேற்ற மங்கலான காற்சாட்டையும் அணிந்து சந்தேகநபர் சிவகுமார் வந்திருந்தார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஏ. எல். அமீன் சட்டத்தரணி சி. வி. விவேகானந்தன், சட்டத்தரணி பொன். வெற்றிவேலு ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார். இறந்த மாலினியின் நலனைக்கவனிக்க சட்டத்தரணி த. ஸ்ரீபதி, சட்டத்தரணி கே அசோகநாதனின் உதவியுடன் ஆஜரானார்.

தேநீர் இடைவேளைக்குப் பின் நீதிமன்றம் கூடியபோது இவ்வழக்கு கூப்பிடப்பட்டதும், எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ. எல். அமீன் சந்தேக நபரை விடுதலை செய்யக்கோரும் விண்ணப்பத்தைப் பொலிஸ் மூலம் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாக சட்ட மாஅதிபர் தெரிவித்ததாக அப்பீல் நீதிமன்றத்தில் அரசதரப்பில் கூறப்பட்டதாகக் கூறினார்.

பொலிஸ் தரப்பில் பொலிஸ் சர்ஜன்ட் இ. திருவிளங்கம் விளக்கமளித்தார்.

சட்டத்தரணி அமீன் மேலும் தெரிவித்ததாவது:-

'யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நடந்த மரணவிசாரணையின்போது சாட்சியமளிக்கச் சென்ற சிவகுமார் றிமாண்டில் வைக்கப்பட்டார். 4-ம் திகதி சட்டத்தரணி சத்தியேந்திரா பிணைமனு தாக்கல் செய்து வாதிட்டார். ஆனால் தொடர்ந்து சந்தேக நபராக்கப்பட்ட சிவகுமார் றிமாண்டில் வைக்கப்பட்டார், பிணைமனு நிராகரிக்கப்பட்டது. இதனால் அப்பீல் நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்தோம், நேற்றைய தினம், சாட்சியங்கள் இல்லாததினால் சந்தேகநபரை விடுதலை செய்யுமாறு பொலிஸ் மூலம், இந்நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்ய விருப்பதாக அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டதால் மனுவை வாபஸ்பெற்றோம். ஆதலால் அவரை விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்''

மாலினியின் நலனைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணி த ஸ்ரீபதி ''நீதியான விசாரணை ஒன்று நடைபெற வேண்டும் என்பதே எங்கள் விண்ணப்பமாகும்'' என்றார்,

சட்டத்தரணி ஸ்ரீபதி சம்பவம் நடந்த இடத்திற்கு சந்தேநபர் செல்லக்கூடாதென்றும், சாட்சிகளில் தலையிடக்கூடாதென்றும், அப்படி அவர் தலையிட்டால், இந்நீதிமன்றம் அவரைக் கைதுசெய்து விசாரணை செய்யவேண்டும் என்பதே எங்கள் விண்ணப்பமாகும் என்றுகூறினர்.

நீதவான் இதுவரைபோதிய சாட்சியங்கள் இல்லை எனக் கூறி சந்தேகநபரை விடுதலை செய்து, விசாரணையை அடுத்த மாதம் 4ம் திகதிக்கு ஒத்திவைத்தார். [க]

## மரண அறிவித்தல்

### இறைகுமாரன்

இறைகுமாரன் அகால மரணமானர். இவர் அளவெட்டி ஆசிரியர் பரநிருபசிங்கம், சுகிர்தமலர் ஆகியோரின் அருமைத் தலைமகனும், விற்றேல் போஸ்ரிட், திருமதி அருணு ரவிதாசன், கிரிஜா, சென் ஜோன்ஸ் அக்கடமி ஜமுனு, நளினு, பரசுதரன் ஆகியோரின் சகோதரருமாவர். மரணக்கிரியைகள் இன்று [28-5-82] வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். 3353

## மரண அறிவித்தல்



### வைத்தியர்

### அரசபிள்ளை நடராசா (ஜே. பி.)

### சமாதான நீதிவான்

யாழ்ப்பாணம், நல்லூர், அரச வீதியைச் சேர்ந்த வைத்தியர் அரசபிள்ளை நடராசா (ஜே. பி.) சமாதான நீதிவான் அவர்கள் 26-5-1982ந் திகதியன்று அகால மரணமடைந்துவிட்டார். இவர் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் உதவி மேயரும், உறுப்பினரும் காலஞ்சென்ற விவாகப் பதிவாளர் திருமதி இலட்சுமியம்மாவின் அன்புக் கணவரும், பொரளை ஆயுர்வேத வைத்தியசாலை டாக்டர் ந. விஜேஜேந்திரனினதும், இங்கிலாந்து கணேந்திரனதும், திருமதி சந்திரா சண்முகலிங்கத்தினதும் அன்புத் தந்தையும் குபிளான் கிராம சேவையாளர் திரு. ந. சண்முகலிங்கத்தினதும், திருமதி விமலா விஜேஜேந்திரனினதும், திருமதி மாலினி கணேந்திரனினதும் அன்பு மாமனுரும், காலஞ்சென்ற அ. சரவணமுத்து, திருமதி சிவக்கொழுந்து முத்தம்மா ஆகியோரது சகோதரனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரிகைகளுக்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து (இன்று) 28-5-82 வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு செம்மணிமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 3343

## நள்ளிரவு...

[-1ம் பக்கத் தொடர்ச்சி]

ரெருு இளைஞரான இறைகுமாரனின் வீட்டுக்குச்சென்றனர் என்றும் அங்கே இறைகுமாரனை கூப்பிடும் சத்தம் கேட்டதாகவும் அப்பொழுது அவரது தந்தையாரான பரநிருபசிங்கம் (அருணோதயா கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர்) உமாகுமாரன்தான் மோட்டார் சைக்கிளில் வந்து கூப்பிடுகிறார் என்று நினைத்து, வீட்டுக்கு வெளியில் வந்து, 'இறைகுமாரன் தோட்டத்திலுள்ள சிறு வீட்டில் படுத்திருக்கிறார்' என்று சத்தமிட்டார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இவ்விரு இளைஞர்களும், குறிப்பிட்ட இனந்தெரியாத கோஷ்டியினரால் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்று பொலிசார் நம்புகின்றனர்.

இறைகுமாரன் சடலம் சாரம் மடித்துக்கட்டிய நிலையிலும், உமாகுமாரன் சடலம் ஷேர்ட், சாரம் அணிந்தநிலையிலும் காணப்பட்டது. (யா

## றேட்டரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டையும் வளர்ப்பதே இம்முகாம்களின் முக்கிய நோக்கமாகும்.

இன்றைய நிகழ்ச்சிகள் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகி, இரவு 10 மணிக்கு முடிவடையும். உத்தியோக வைபவத்தை காலை 11-30 மணிக்கு யாழ்.மாவட்ட அபிவிருத்திசபைத்தலைவர் திரு சு, நடராசா ஆரம்பித்துவைப்பார். பேராசிரியர் டபிள்யூ எல் ஜெயசிங்கம் வரவேற்புரைநிகழ்த்துவார். திரு. ஆர். இராஜலிங்கம் முகாமின் நோக்கத்தை விளக்கிப் பேசுவார். திரு வி. ரி. சிவலிங்கத்தின் நன்றிஉரையுடன் காலை நிகழ்ச்சிகள் முடிவடையும்.

மாலை நிகழ்ச்சியில் வடபகுதி பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ஏ. நடராத்தினம் ''விளையாட்டுக்கள் மூலம் பரஸ்பர நல்லுறவையும் தேசிய ஒருமைப்பாட்டையும் வளர்த்தல்' பற்றிஉரையாற்றுவார். (கு)

## திருக்கேதீஸ் ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இம்மாதம் 26 ம் திகதி ஆரம்பமான வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ருத்ரா அபிஷேகத்துடன் நிறைவுபெறுகிறது

### நாளை

நாளை சனிக்கிழமை நடைபெறும் 4-ம் திருவிழா யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியின் உபயமாகும். நாளை இரவு சங்கீதபூஷணம் பொன்னுலை திரு. சு. கணபதிப்பிள்ளையின் இன்னிசைக் கச்சேரியும் பண்ணிசை வேந்தன் திரு. வேலுப்பிள்ளை சிவஞானத்தின் பண்ணிசைக் கச்சேரியும் இடம் பெறும். (இ)

## பகிஷ்கரிப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தையின்போது அஞ்சல் அதிபர் நாயகம், அஞ்சல தொலை தொடர்பு உத்தியோகத்தர்களுக்கு இரண்டு வருடாந்த வேதன அதிகரிப்புக்குச்சமமான வேதன அடிப்படை அதிகரிப்புப் ரூபா 30/- வரையிலான அலவன்சும் மேலதிகமாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உறுதியளித்தார் இதனல் இலங்கை அஞ்சல் தொடர்பு உத்தியோகத்தர்சங்கம் திருப்தியடையாவிடினும் கோரிக்கையில் சிறிதளவாவது வெற்றி கிட்டும் நிலையில் இப்பகிஷ்கரிப்பில் கலந்து சொள்வதில்லையெனத் தீர்மானித்துள்ளது. (இ

## 150 போலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுசம்பந்தமாக இருபத்தைந்து இலங்கை இளைஞர்கள் பொலிஸ் விசாரணைக் குட்படுத்தப்பட்டனர்

பிரபாகரன், உமாமகேஸ்வரன் கைது செய்யப்பட்டதற்கு பின்னர், சென்னை நகரப் பொலிசார் திடீர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இலங்கை மாணவர்கள் மற்றும் தமிழ்நாட்டுக்கு அடிக்கடி விஜயம் செய்யும் இலங்கையின் வடபகுதி இளைஞர்கள் தங்கியிருக்கும் பகுதிகளில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணை காரைக்காடு வைரவர் சைவபரிபாலன சபையினரின் மாதாந்தக் கூட்டம் இம்மாதம் 30ம் திகதி தலைவர் க. செல்லையா தலைமையில் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலைஞர் எஸ். கே யோகநாதன் 'வைரவர் வழிபாடு' என்னும் பொருள்பற்றி உரையாற்றுவார்.


மிகவும் குறைந்த
விசேட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
மக்கினென்ஸ் வழங்குகிறது
★ சிங்கப்பூர் கூட்டாகச் செல்வோருக்கு
(GROUP TICKETS) மிகவும் கூடிய கழிவுடன்
மற்றும் ஃ மத்திய கிழக்கு ஃ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும்
விரும்பிய விமானத்தில்
விமான டிக்கட்
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான
எம்மிடம்
வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில்
பிரயாணக் காசோலைகள்
(TRAVELLERS CHEQUES)
நாடுங்கள்
மக்கினென்ஸ் ட்றவல்
சேவிஸ்(சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த: பெ. எண். 92, தொலைபேசி:8154


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் மே 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.